# பத்தாம் வகுப்பு அரையாண்டுப் பொதுத்தேர்வு – டிசம்பர்- 2016 அறிவியல் பாட விடைக்குறிப்புகள்

## பிரிவு - I

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:** 15 X 1 = 15

| | | |
|---|---|---|
| 1 | DNA - லிகேஸ் | 1 |
| 2 | BCG | 1 |
| 3 | நியூரான் | 1 |
| 4 | மகரந்ததாள் வட்டம், சூலக வட்டம் | 1 |
| 5 | 98.4-98.6°F | 1 |
| 6 | எத்தனால் | 1 |
| 7 | கார்பெட் தேசிய பூங்கா | 1 |
| 8 | மீத்தேன் | 1 |
| 9 | சிதறலால் | 1 |
| 10 | 7 | 1 |
| 11 | Mg | 1 |
| 12 | கார்பன் | 1 |
| 13 | திரவஹைட்ரஜன் | 1 |
| 14 | இராண்ட்ஜன் | 1 |
| 15 | எந்திர ஆற்றல் | 1 |

## பிரிவு – II

குறிப்பு:– ஏதேனும் இருபது வினாக்களுக்கு விடையளிக்கவும் 20×2=40

| | | | |
|---|---|---|---|
| 16 | • ஓரினச்செல் எதிர்ப்பு பொருள் ஆகும்.<br>• ஹைபிரிட்டோமா தொழில்நுட்பம் மூலம் குளோன் செல்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. | 2 | 2 |
| 17 | • பொருந்தாத இணை: இண்டர்பெரான்கள் - பாக்டீரியா எதிர்ப்பு புரதம். | 2 | 2 |
| 18 | அ.சரி.<br>ஆ.தவறு.<br>உடலுறுப்பு பயன்பாட்டு விதியை ஜீன் பாப்டைஸ் லமார்க் கூறினார். | ½<br>½<br>1 | 2 |
| 19 | • HIV ஐக் கண்டறியும் ஆய்வு - <u>எலைசா (ELISA)</u><br>• HIV ஐ உறுதிப்படுத்தும் ஆய்வு - <u>வெஸ்ட்டர்ன் பிளாட்</u> | 1<br>1 | 2 |
| 20 |  → இரைப்பை<br>→ முன் சிறுகுடல்<br>→ கணைய நாளம்<br>→ லாங்கர்கான் திட்டுகள் | 1<br>1 | 2 |
| 21 | அ.ஆட்டோகோரி – iv) பால்சம்<br>ஆ.அனிமோகோரி – ii) டிரைடாக்ஸ்<br>இ.ஹைடிரோகோரி – i) தாமரை<br>ஈ.சூகோரி – iii) சாந்தியம் | 2 | 2 |
| 22 | (see table below) | 2 | 2 |

Q21:

| | |
|---|---|
| அ.ஆட்டோகோரி | iv) பால்சம் |
| ஆ.அனிமோகோரி | ii) டிரைடாக்ஸ் |
| இ.ஹைடிரோகோரி | i) தாமரை |
| ஈ.சூகோரி | iii) சாந்தியம் |

Q22:

| கழிவு நீக்க உறுப்பு | வெளியேற்றும் கழிவு | கழிவுப் பொருள்கள் |
|---|---|---|
| சிறுநீரகம் | சிறுநீர் | யூரியா, யூரிக் அமிலம், கிரியாட்டினின் போன்ற முக்கிய நைட்ரஜன் கழிவுகள் |
| நுரையீரல் | வெளியேற்றப்படும் காற்று | கார்பன் டைஆக்சைடு, நீர் ஆவியாதல் |
| தோல் | வியர்வை | அதிகமான நீர் மற்றும் உப்புகள் |

தயாரிப்பு :- மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.
மீனா.மேகநாதன் M.Sc., B.Ed., M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 23 | ஆ. சிறுநீரகம் இரத்தத்தின் வேதியியைபு சமநிலையைப் பேணுகிறது | 2 | 2 |
| 24 | அ. கார்டியாக் தசை ஆ.சிஸ்டோல் இ.டையஸ்டோல் ஈ.72 | 2 | 2 |
| 25 | $C_6H_{12}0_6$ + $6O_2$ | 1<br>1 | 2 |
| 26 | A - நேர் ஈர்ப்புச் சார்பு இயக்கம் (அ) புவிதிசை சார்பு இயக்கம்<br>B - எதிர் ஈர்ப்புச் சார்பு இயக்கம் (அ) ஒளி திசை சார்பு இயக்கம் | 1<br>1 | 2 |
| 27 | தற்சார்பு ஊட்டமுறை / பச்சையம் / ஹைபிஸ்கஸ்<br>ஒட்டுண்ணிகள் / ஹாஸ்டோரியங்கள் / கஸ்குட்டா<br>மக்குண்ணிகள் / மைக்கோரைசா வேர்கள் / மானோட்ரோப்பா | 1<br>½<br>½ | 2 |
| 28 | அ. (A)வும் (R)வும் சரி மற்றும் (R), (A) விற்கான சரியான விளக்கம் | 2 | 2 |
| 29 | அ.பெட்ரோலியம்<br>ஆ.சொறிசிரங்கு | 1<br>1 | 2 |
| 30 | மரபு சாரா வளங்கள் : சூரிய ஆற்றல்,காற்று, ஹைட்ரஜன்<br>மரபு சார் வளங்கள் : கரி,இயற்கை வாயு, பெட்ரோலியம் | 1<br>1 | 2 |
| 31 | 90% மீத்தேன் சிறிதளவு ஈத்தேனும் புரோப்பேனும் இயற்கை வாயுவில் உள்ளது. | 1<br>1 | 2 |
| 32 | அ) முகவை B<br>ஆ) முகவை A | ½ ½<br>½ ½ | 2 |
| 33 | நிறை சதவீதம் = கரைபொருளின் நிறை / கரைபொருளின் நிறை + கரப்பானின் நிறை x 100<br>= 10 / 10+40 x 100<br>= 1000 / 50<br>= 20% | 1<br>1 | 2 |
| 34 | அ. குளோரின் - ஈரணு மூலக்கூறு<br>ஆ. நியான் - ஓரணு மூலக்கூறு<br>இ. பாஸ்பரஸ் - பல அணு மூலக்கூறு<br>ஈ. ஓசோன் - மூவணு மூலக்கூறு | ½<br>½<br>½<br>½ | 2 |
| 35 | அ) வினிகர் ஆ) இரத்தம், சமையல் சோடா, வீட்டுப்பயன்பாட்டு அம்மோனியா | 1<br>1 | 2 |
| 36 | $P^H = -\log_{10} [H^+]$<br>$P^H = -\log_{10} [0.001]$<br>$P^H = -\log_{10} [1\times10^{-3}]$<br>$\therefore P^H = 3$ | 1<br>1 | 2 |
| 37 | லேசானது,<br>வலிமையானது<br>இழுவிசை அதிகம்<br>அரிப்பை தடுப்பவை | 2 | 2 |
| 38 | அ) தவறு. <u>Ag - Sn இரசக்கலவை</u> பற்குழிகளை அடைக்கப் பயன்படுகிறது.<br>ஆ) தவறு . சிலைகள், நாணயங்கள், கோவில் மணிகள் தயாரிக்க <u>வெண்கலம்</u> பயன்படுகிறது. | 2 | 2 |
| 39 | வைரத்தில் உள்ள ஒவ்வொரு கார்பன் அணுவும் மற்ற நான்கு கார்பன் அணுக்களுடன் நான்முகி அமைப்பில் பிணைப்புற்று கடின முப்பரிமாண அமைப்பை உருவாக்குகின்றது. எனவே வைரம் கடினத்தன்மை கொண்டது. | 2 | 2 |
| 40 | நியூட்டனின் மூன்றாம் விதி மற்றும் உந்த அழிவின்மை விதி. | 2 | 2 |
| 41 | நேர், எதிர் | 1<br>1 | 2 |

தயாரிப்பு :- மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.
மீனா.மேகநாதன் M.Sc., B.Ed., M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 42 | அ. அம்மீட்டர்<br>ஆ. மரபுசாரா ஆற்றல் | 1<br>1 | 2 |
| 43 | அ. மின்கலம் -<br>ஆ. சாவி (திறந்தது) -<br>இ. மின்தடை –<br>ஈ. வோல்ட்மீட்டர். -  | ½<br>½<br>½<br>½ | 2 |
| 44 | $1/R_P = 1/R_1 + 1/R_2 + 1/R_3$<br>$1/R_P = 1/5 + 1/10 + 1/30 = 10/30$<br>$R_P = 30/10 = 3$ ஓம். | 1<br>1 | 2 |
| 45 | காரணம் : காந்த விசைக்கோடுகள் மூடிய வளைக்கோடுகள் ஆகும். | 2 | 2 |
| 46 | அ.மின்காந்தம்<br>ஆ.டையாப்டர் | 1<br>1 | 2 |
| 47 | விடை :<br>அ.  <br>ஆ. குழியாடியின் குவியத்தின் வழியே செல்லும் படுகதிர், எதிரொளிப்புக்குப் பின் முதன்மை அச்சுக்கு இணையாகச் செல்லும். | 1<br><br>1 | 2 |

**பிரிவு – III** 4×5=40

| | | | |
|---|---|---|---|
| 48 | ✱ பிளாஸ்மோடியத்தின் பால் இனப்பெருக்கம் பெண் அனாபிலஸ் கொசுவிலும், பாலிலா இனபெருக்கம் மனிதரிலும் நடக்கிறது.<br>✱ பாலிலா இனப்பெருக்கம் போது ஸ்போரோசுவாய்டுகள் உருவாகிறது.<br>✱ இந்த ஸ்போரோசுவாய்டுகள் கொசுவின் உமிழ் நீரில் வந்து சேருகிறது.<br>✱ பெண் அனாபிலஸ் கொசு மனிதனைக் கடிக்கும் போது ஸ்போரோசுவாய்டுகள் மனித உடலில் நுழைகிறது.<br>✱ மனித உடலில் நுழைந்த ஸ்போரோசுவாய்டுகள் முதலில் கல்லீரலில் பெருகி சிவப்பு அணுக்களை தாக்கி வெடிக்கச் செய்கிறது.<br>✱ இரத்த சிவப்பணுக்கள் வெடிக்கும் போது "ஹீமோசோயின்" என்ற நச்சுப் பொருள் வெளியே வந்து இரத்தத்தில் கலக்கிறது.<br>✱ இந்த நச்சுப் பொருள் கடுமையான காய்ச்சல் மற்றும் உடல் குளிர்ந்து நடுக்கத்தையும் உண்டாக்குகிறது.<br>✱ இதற்கு மலேரியா காய்ச்சல் என்று பெயர். இந்த காய்ச்சல் 3 முதல் 4 நாள்கள் வரை நீடிக்கும்.<br>  | 5 | 5 |

தயாரிப்பு :- மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம். மீனா.மேகநாதன் M.Sc., B.Ed., M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம்

www.Kanchikalvi.com

**49**

- நரம்புச் செல்கள் அல்லது நியூரான்களே, நரம்பு மண்டலத்தின் அமைப்பு, செயல் அலகுகள் ஆகும்.
- நுண் அமைப்பான நரம்புச் செல், மூன்று பகுதிகளைக் கொண்டது.

அவை,

1. செல் உடலம்,
2. டெண்டிரைட்டுகள்,
3. ஆக்ஸான்கள் ஆகும். 1




1 | 5

3

<u>செல் உடலம்</u>:

- நரம்புகளின் செல் உடலம், ஒழுங்கற்ற வடிவம் அல்லது பன்முகச் சீரமைவற்ற அமைப்பு ஆகும்.
- நரம்புசெல் (அ) நரம்பு செல்லின் உடலம் சைட்டான் எனவும் அழைக்கப் பெறும்.
- செல் உடலத்தில் சைட்டோபிளாசம், நிசில் துகள்கள், செல் நுண்ணுறுப்புகள் போன்றவைகாணப்படுகிறது.
- நிசில் துகள் என்பவை புரதச் சேர்க்கைக்கான ரிபோசோம்களைக் கொண்டவை.

<u>டெண்டிரைட்டுகள்</u>:

- செல் உடலத்திலிருந்து வெளிப்புறமாக நீட்டிக் கொண்டிருக்கும், அடுத்தடுத்துக் கிளைத்தலுக்குள்ளான குட்டை இழைகளே டெண்டிரைட்டுகள் அல்லதுடெண்டிரான் ஆகும்.
- டெண்டிரைட்டுகள்செல் உடலை நோக்கி மின்தூண்டல்களைக் கடத்துகின்றன.

<u>ஆக்ஸான்</u>:

- செல் உடலத்திலிருந்து உருவாகும் இழைகளில் ஒன்று மிக நீண்டு காணப்படும். முடிவில் இது கிளைத்துக் காணப்படும். இஃது ஆக்ஸான் என அழைக்கப்படும்.
- ஆக்ஸான்பின்முனைக் கிளைத்த, குமிழ் போன்ற அமைப்பில் முடிகின்றது. இவை நரம்புச் செல் இடைவெளிக் குமிழ்கள் என அழைக்கப்படும்.
- இவை நரம்புக் கடத்தும் பொருள் அல்லது நரம்பு சமிங்சைகளை கடத்தும் பொருள் என்ற வேதிப்பொருளால் நிரப்பப்பட்டுள்ளன.
- ஆக்ஸானிலுள்ள சைட்டோபிளாசத்திற்கு ஆக்ஸோபிளாசம் என்று பெயர்.
- ஆக்ஸானைச் சூழ்ந்துள்ள மையலின் என்ற உறையானது பலஅடுக்குகளைக் கொண்ட ஸ்வான் செல்களால் ஆனது. இதன் வெளி அடுக்கிற்கு நியூரிலெம்மா என்று பெயர்.
- ஆக்ஸானின் கிளைத்த முடிவுப் பகுதிகளைத் தவிர, மற்ற பகுதிகளை நியூரிலெம்மா போர்த்தியபடி உள்ளது. ஆக்ஸானின்மீது மையலின் உறையால் உண்டாக்கப்படும் இடைவெளிகள், 'ரேன்வியரின் கணுக்கள்' எனப்படும். நியூரிலெம்மா ரேன்வியர் கணுக்களில் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.
- மின்தூண்டல் விரைவாகக் கடத்துவதை மையலின் உறை உறுதி செய்கிறது.

**50**

<u>அ. மகரந்தச் சேர்க்கை</u> :

- மகரந்தப் பையிலிருந்து மகரந்தத் தூள்கள் சூலக முடியைச் சென்றடையும் செயலே மகரந்தச் சேர்க்கை என்று பெயர். 2

<u>ஆ.மகரந்தச் சேர்க்கையின் வகைகள்</u> :

1. தன் மகரந்தச்சேர்க்கை
2. அயல் மகரந்தச்சேர்க்கை

1 | 5

இ. அயல் மகரந்தச்சேர்க்கை நன்மை தரக் கூடியது.

<u>காரணம்</u> : 2

- விதைகள் திடமான தாவரங்களாக வளரும் தன்மையைப் பெற்றிருக்கும்.
- புதிய தாவர வகைகள் உருவாகும்.
- நன்கு முளைக்கும் திறனுடைய விதைகள் உருவாகும்.



www.kanchikalvi.com

**51**

- இல்லை, உடல் நலத்திற்கு ஏற்றது அல்ல. 1

காரணம்:

- புகை மண்டலத்தில் உள்ள கார்பன் துகள்கள் சுவாசம் மூலம் உடலின் உள்ளே சென்று இரத்தக் குழாய்களில் படிவை ஏற்படுத்தும், இதனால் மாரடைப்பு ஏற்படும்.
- புகையில் உள்ள $CO_2$ வளிமண்டல வெப்ப மாறுதலுக்கு காரணமாக அமைந்து, வளிமண்டல வெப்ப நிலையை உயர்த்தும். 5
- நிலம், நீர் மாசடையும்.
- புகையில் உள்ள அதிகமான $CO_2$ ஆல் அமிலமழை உண்டாகும். இதனால் விவசாய பயிர்கள் பாதிப்படையும். 4
- நமது நுரையீரல் மற்றும் சுவாசப் பாதைகள் பாதிக்கப்படுவதோடு சுவாசக் கோளாறுகளையும் ஏற்படுத்துகிறது.

**52**

அ. 1

நவீன அணுக்கொள்கை : 1

1) அணு வேதிவினையில் ஈடுபடும் மிகச் சிறிய துகளாகும்.
2) அணுக்கள் பிளக்கக்கூடியவை. 5
3) ஒரு தனிமத்தின் அனைத்து அணுக்களும், அனைத்து பண்புகளிலும் ஒத்திருக்க வேண்டிய அவசியமில்லை. (எ.கா.) ஐசோடோப்புகள் ($_{17}CL^{35}$ , $_{17}CL^{37}$) 3
4) வெவ்வேறு தனிமங்களைச் சேர்ந்த அணுக்கள் சில பண்புகளில் ஒத்திருக்கும். எ.கா : ஐசோபார்கள் : ( $_{18}Ar^{40}$ , $_{20}Ca^{40}$ )
5) ஒரு மூலக்கூறில் உள்ள அணுக்களின் விகிதம் முழுமையானதும், நிணயிக்கப்பட்டதும், ஆனால் அது எளிய விகிதமாக இருக்கவேண்டிய அவசியமில்லை. எ.கா : சுக்ரோஸ்.
6) ஒரு தனிமத்தின் நிறையை,அதன் ஆற்றலாக மாற்ற முடியும். $E = mc^2$ , E = ஆற்றல், m = நிறை, c = ஒளியின் வேகம்.

ஆ.

| அணு | மூலக்கூறு |
|---|---|
| வேதிவினையில் ஈடுபடும் ஒரு தனிமத்தின் மிகச்சிறிய துகள் அணுவாகும். | ஒரு தனிமம் அல்லது ஒரு சேர்மத்தின் மிகச்சிறிய துகள் மூலக்கூறாகும். |
| பிணைப்புறாத் துகள். | பிணைப்புற்றத் துகள். |
| தனித்தோ சேர்ந்தோ காணப்படும். | தனித்துக் காணப்படும். |

**53**

அ.கழிவுப்பாகு
ஆ.அம்மோனியம் சல்பேட் (அ) அம்மோனியம் பாஸ்பேட் 5
இ.இன்வர்டேஸ் நொதி
ஈ.எரிசாராயம்
உ.தனி ஆல்கஹால்

**54**

சந்திராயன் - I ன் சாதனைகளுள் ஏதேனும் ஐந்து எழுதுக, 2

1. நிலவின் மண்ணில் நீர் மூலக்கூறுகள் அதிகப் பரப்பில் பரவியிருப்பதைக் கண்டறிந்தது.
2. சந்திராயனின் கனிம வரை கருவி, நிலவு முற்காலத்தில் முற்றிலும் உருகிய நிலையிலிருந்ததை உறுதி செய்கிறது.
3. நிலவின் கனிம வளம் பற்றிய தகவல்கள் உயர் பகுதிறன்நிறமாலைமானிமூலம்பெறப்பட்டது. 5
4. நிலவின் மேடுபள்ளங்களை நில வரைபட ஒளிப்படக்கருவி பதிவு செய்தது.நிலப்பரப்பு அதிகப் பள்ளத்தாக்குகளைக் கொண்டது.
5. புவியின் முழு வடிவத்தையும் முதன்முறையாகப் பதிவு செய்து அனுப்பியது. 3

**55.**

அ.




ஆ. S1,S2 - நழுவு வளையங்கள்

B1,B2 - தூரிகைகள்

NS - நிலைக்காந்தம்

ABCD - செவ்வக வடிவ கம்பிச் சுருள்

R - மின்தடை

இ.AC மின் இயற்றி

ஈ)மின்காந்த தூண்டல் தத்துவம்

தயாரிப்பு :- மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.
மீனா.மேகநாதன் M.Sc., B.Ed., M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம்

www.Kanchikalvi.com

தயாரிப்பு :- மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.
மீனா.மேகநாதன் M.Sc., B.Ed., M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம்